O.S.53/2022
PW1 – சரவணன்
நாள் 28.07.2025, 12.55 P.M.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் பிராதிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள விவரங்களை நான் சொல்லிதான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பா செந்தூர்பாண்டிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 5 பேர். 3 பெண் மற்றும் 2 ஆண்கள். சாயல்குடி சார் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண் 3.4/2014 உயில் ஆவணமானது எனக்கு எப்போது தெரியும் என்றால் எனது அப்பா இறப்பதற்கு சுமார் 5 மாதங்களுக்கு முன்புதான் தெரியும். எனது அப்பா மேற்படி உயிலை ரத்து செய்யவதற்கு நடவடிக்கை எடுத்தாரா என்றால் எனது அப்பாவால் எழுந்து நடக்க முடியவில்லை.

2. பொதுவாக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை ரத்து செய்ய வேண்டும் எனில் சம்பந்தப்பட்ட சார் பதிவக அலுவலத்திற்கு சென்றுதான் ரத்து செய்யவேண்டும் என்றால் சரிதான். எனது அப்பா இறப்பதற்கு முன் 6 மாதமாக நடக்கமுடியாமல் இருந்தற்கான மருத்துவ சான்றிதழ்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி இராமகிருஷ்ணன்தான் எனது அப்பாவின் கடைசி காலத்தில் பாராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமான உயிலில் 3ம் பக்கத்தில் 3வது பாராவில் வயதீகம் காரணமாக பதிவாளர் அலுவலகம் சென்று ரத்து செய்யமுடியாததால் இந்த உயில் ஆவணத்தை எனக்கு எழுதிதந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் 4வது பக்கத்தில் சாயல்குடியில் வைத்து எனது அப்பா கையொப்பம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அப்பா சாயல்குடியில் உள்ள எனது வீட்டில் வைத்து கையொப்பம் செய்தார். பத்திர பதிவு அலுவலகம் சாயல்குடியில் உள்ளது என்றால் சரிதான்.

3. எனது அப்பா எஸ்.கீரந்தையில்தான் இருந்தார் என்றாலும் சாயல்குடியில் இல்லை என்றால் சரியல்ல. எனது அப்பா நன்றாக கையொப்பம் செய்வார் என்றால் சரிதான். உயிலில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் மதிப்பு மிக்கவை என்றால் சரியல்ல. இந்த உயிலில் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ள மூன்று நபர்களும் என்னுடம்

பிறந்தவர்கள் என்றால் சரியல்ல. 3வது நபரான வள்ளி என்னுடன் பிறந்தவர். வள்ளிக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும் நானும் சேர்ந்துகொண்டு 2,3 பிரதிவாதிகளை மோசடி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் உற்பத்தி செய்துள்ள உயில் ஆவணத்தில் சொத்து விவரங்கள் சரியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி